# பத்திரிக்கை செய்தி

## மின் அளவீட்டு கருவியை பொருத்துவதற்காக ரூ.2,000/- லஞ்சம் கேட்டு வாங்கிய உதவி மின் பொறியாளர் கைது

புகார்தாரர் திரு.மருதப்பன், நங்குடி கிழக்கு தெரு, புவனகிரி, கடலூர் மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் தன் வீட்டில் சூரிய ஒளி மின் தகடுகளை தனியார் நிறுவனம் மூலமாக பொருத்தியுள்ளார். சூரிய ஒளி மின் உற்பத்தியை கணக்கீடு செய்யும் மின் அளவீட்டு கருவியை பொருத்துவதற்காக மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மாண கழகம், சேத்தியாத்தோப்பு தெற்கு உதவி மின் பொறியாளர் அலுவலகத்தில் புகார்தாரர் பேரில் நிறுவனத்தின் மேலாளர் திரு.சசிதரன் விண்ணப்பித்துள்ளார். விண்ணபத்தினை பரிசீலனை செய்து மேல் நடவடிக்கை எடுக்க திரு.அம்பேத்கர், உதவி மின் பொறியாளர், மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மாண கழகம், சேத்தியாத்தோப்பு தெற்கு உதவி மின் பொறியாளர் அலுவலகம் அவர்கள் தனக்கு ரூ.2,000/- லஞ்சமாக தர வேண்டும் என வற்புறுத்தியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை கடலூர் மாவட்ட பிரிவில் அளித்த புகாரின் பேரில் 22.04.2025, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.அம்பேத்கர், உதவி மின்பொறியாளர் லஞ்ச பணம் ரூ.2,000/-யை புகார்தாரரிடமிருந்து பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.